## மெட்றாஸ் அப்பா எனும் சித்தப்பா!



முகமெழுதும் முறுவல்தான் முகவரியாய் நிறைந்திடுமே!
அகம்தன்னில் பயமுண்டு அடுத்தடுத்தச் செயல்களிலே!
பகைகாட்டா மனமதுவே பார்வையிலும் மனம்வெல்லும்!
திகைப்பூட்டச் சிலநாளில் திடீரெனக் கோபம் வரும்!

கிள்ளையாய் நிறைந்த போது, அவர் தொல்லையின்றி,
தோள்துண்டில் அழகாய்க் கண்டதுவோ நெருப்புத் துண்டம்!
தந்தையிடம் கேட்டதுவோ தகுதியான மழலைத் தேடல்!
**பிடாரி குளந்தனிலே** பொட்டுக்கடலையுடன் சர்க்கரையும்,

கொட்டி வைத்திருந்தால் போகும்போதும் வரும்போதும்,
அள்ளி உண்போம் என்பதுவே! அவர்கூற மகிழ்ந்த தந்தை!
தானும் அப்பிள்ளைக்குத் தனியே கூடுதலாய் அளித்து மகிழ,
கல்லூரி காலமதில் இருப்புபாதை வழி நாளும் நடந்தே

தாம், இடையறாது மகிழ்வாய்ச் சென்ற நறுந்தகவலுண்டு !
பணிகொண்ட காலத்தில் நாள்தோறும் தவறாது,
பனிக்குழைவு உண்ட, சீர் தகவல் தாமும் உண்டு!
மழலையில் அவர்பேச்சை மருவிலாது அண்ணன்மார்,

மகிழ்ந்தே பலநாளில் சொல்லியே மகிழ்வதுண்டு!
தாயவள் எங்கள் பாட்டி தகைவுடன் சொல்வதுண்டு!
நாயகன் என்பிள்ளை **பிரகலாதன்** ஒருநாளும்,
நானழைக்க செவிகேளான்! அவன் மனத்தில்,

தாயழைத்தால் சொல்வாள் வேலையென்று,
தப்பாமல் எழுதிவைத்தே நாளும் வாழ்ந்திருப்பான்!
கூவியழைத்திடவும் அவனும் ஓடிவாரானே எந்நாளும்!
எப்போதும் நான் அவனை ஏதும் சொல்வதில்லை!

பள்ளி, கல்லூரி என்று பலதூரம் சென்றேப் படித்திட்டான்
என்றவளும் எந்நாளும் சொல்லக் கேட்பதுண்டு நாங்கள்!
அன்னவரின் சிறுவயதுச் செய்கையில் அளப்பரிய கதைகளுண்டு!
**இண்டி இந்தா தாம்பு எடுத்து நண்ணே போய் இன்னே வா!**

அண்ணனில் பெரியவரை அழைத்து வரச் சொன்னதுவாம்!
கால்சட்டை மேல்சட்டை தந்தையார் கணக்குப் பார்க்கையிலே,
காணாமல் போனதென்று கலங்காமல் சொல்லிச் செல்வதுண்டாம்!
மணிக்கட்டில் விளைந்த காயம் முருங்கைக் காயின் அணியாம்!

இப்படியாக அவர் இளநிகழ்வை அண்ணன்மார் பகிர்ந்திருப்பர்!
அப்படியாக ஆண்டுகள் கடக்க அகவையோ தொன்னூற்று நான்கு!
எப்போதும் அவர்க்கு பயமுண்டு யாவிலும் பெருங்குழப்பமுண்டு!
தப்பாது பயமேற்றித் தன்நிலையைத் தான் பகிர்ந்திடுவார்!

எப்போதும் அவர் இதழ் கூட்டும் புன்சிரிப்பு நிலைத்திருக்கும்!
தப்பாமல் அவர்நினைவைத் தந்திடத் தான் செய்யும் எந்நாளும் !
அப்பாவின் உடன்பிறப்பில் கடைசியாய் இருந்தவரும் போக,
அப்பாவழி உறவு மண்ணில் எங்களுக்கு யாருண்டு இனியே!
**- கு.ப.அசோகன்.** 05/14-03-2023